**முதலாம் தவணை**
**பரதநாட்டியம் – தரம் – 06**

**பகுதி I**

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக**

**1) சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

1) இயற்கை அசைவுகளில் ஒன்று?
   1. ஓடுதல் 2. மரக்கிளை அசைதல் 3. பாய்தல் 4. துள்ளுதல்
2) நமஸ்காரத்தில் சுற்றி வரும் சிகரக்கை குறிப்பது?
   1. அஷ்டதிக்கு பாலகரை 2. சிவபெருமானை
   3. பூமாதேவியை 4. நடராஜரை
3) த்யான ஸலோகத்தில் வரும் ஆங்கிகம் என்பதை குறிக்க பயன்படும் முத்திரை?
   1. அஞ்சலி 2. சிகரம் 3. ப்ரவம்பம் 4. கடஹாமுகம்
4) தட்டடவுகள் எத்தனை?
   1. 8 2. 4 3. 6 4. 3
5) 2வது தட்டடவின் சொற்கட்டு யாது?
   1. தெய்யா தெய்யா தெய் 2. தெய்யா தெய்
   3. தெய்யா தெய்யா தெய்யா தெய் 4. தெய் தெய் தெய்தெய் தாம்
6) ஒற்றைக்கை முத்திரைகளின் மறு பெயர்
   1. இரட்டைக்கை முத்திரை 2. அஸம்யுத ஹஸ்தம்
   3. ஸம்யுத ஹஸ்தம் 4. அபூர்வ முத்திரைகள்
7) த்யான ஸ்லோகத்தில் குறிப்பிட்ட தெய்வம்?
   1. பூமாதேவி 2. சரஸ்வதி 3. சிவன் 4. பார்வதி
8) நட்சத்திரத்தை குறிக்க பயன்படும் முத்திரை யாது?
   1. காங்கூலம் 2. திரிலிங்கம் 3. ப்ரலம்பம் 4. சதுரம்
9) குருவிற்குரிய ஸ்லோகம் யாது?
   1. குருப்ரம்மா 2. விக்னானாம் 3. அரவிந்த 4. யதோ ஹஸ்த
10) சின்னச் சின்ன சிறுமியர் நாமே என்ற பாடல்
   1. கதைப்பாடல் 2. பாரதியார் பாடல் 3. அபிநயப்பாடல் 4. நாட்டியப்பாடல்

**2) சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (✕) எனவும் அடையாளமிடுக.**

1) ஸம்யுத ஹஸ்தம் என்பது ஒற்றைக்கை முத்திரை ஆகும். ( )
2) முத்திரைகள் செய்வதற்குரிய தசைநார்ப் பயிற்சிகளை செய்ய வேண்டும். ( )
3) தட்டடவு செய்யும் நிலை அரைமண்டி ஆகும் ( )
4) பரத நாட்டியம் கற்பதனால் உடல் உறுதி பெறும். ( )
5) ஒற்றைக்கை முத்திரை 24 ஆகும். ( )

**3) தொடர்புபடுத்துக.**

| | |
|---|---|
| 1) பரதநாட்டியம் கற்பதால் | ரூபகம் |
| 2) "குருப்ரம்மா குருவிஷ்ணு" | இயற்கை அசைவுகள் |
| 3) 3வது தட்டடவு | அஞ்சலி |
| 4) மரம், செடி, கொடி | விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை |
| 5) நமஸ்காரத்தில் இடம்பெறும் இரட்டைக்கை முத்திரை | குரு |

**பகுதி II**

**பின்வரும் வினாக்களில் 3 வினாக்களுக்கு மட்டும் விடை தருக**

1) நடனம் கற்பதால் ஏற்படும் நன்மைகள் தருக.
2) 1. ஒற்றைக்கை முத்திரைகளின் எண்ணிக்கை யாது?
   2. ஒற்றைக்கை முத்திரைகளின் மறுபெயரைக் குறிப்பிடுக
   3. ஒற்றைக்கை முத்திரையை வரிக்கிரமமாக எழுதுக.

3) உலகியல் வரலாற்றை தருக.

4) 1. நமஸ்காரம் ஏன் செய்யப்படுகிறது?
   2. நமஸ்காரத்தில் வரும் கடவுள் யார்?
   3. நமஸ்காரத்தில் வரும் ஒற்றைக்கை முத்திரைகள் எவை?
   4. நமஸ்காரத்தில் வரும் இரட்டைக்கை முத்திரை எது?